டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 12.07.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 021 - Madurai | Online Edition

# இந்தியாவின் மின்னணுப் பொருட்கள் உற்பத்தி, ஏற்றுமதித் திறனை மேம்படுத்த சிந்தனை முகாமிற்கு ஏற்பாடு

புது தில்லி, ஜுலை 11

மத்திய வர்த்தகம், தொழில்துறை அமைச்சகத்தின் வர்த்தகத் துறை, பல்வேறு மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு அமைப்புகளுடன் இணைந்து புதுதில்லி பாரத மண்டபத்தில் சிந்தனை முகாமை நடத்தியது. இந்தியாவின் மின்னணுப் பொருட்கள் உற்பத்தித் துறையை மேம்படுத்துவது, சர்வதேச அளவில் அதன் போட்டித்திறனை அதிகரிப்பது குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. வர்த்தகத் துறை செயலாளர் ராஜேஷ் அகர்வால் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரசு உயரதிகாரிகள், தொழில்துறை தலைவர்கள், வல்லுநர்கள் கலந்து கொண்டனர்.

மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியை அதிகரிக்க நிலையான கொள்கை கட்டமைப்பு அவசியம் என்று வர்த்தகத் துறை செயலாளர் குறிப்பிட்டார்.

வரும் 2030-ம் ஆண்டிற்குள் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 150 பில்லியன் அமெரிக்க டாலர் இலக்கை எட்டுவதற்கான செயல்திட்டம், செமிகண்டக்டர்கள், மின்னணு பாகங்கள் கட்டமைப்பை வலுப்படுத்துவது குறித்த விளக்கக் காட்சிகள் இதில் காண்பிக்கப்பட்டன. உலகளாவிய வர்த்தகத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை சர்வதேச விநியோகக் கட்டமைப்புடன் ஒருங்கிணைப்பது, சுங்க அதிகாரிகளுடன் இணைந்து ஏற்றுமதி நடைமுறைகளை எளிதாக்குவது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

# மானிய விலையில் உள்ள உரங்கள்

# சாகுபடி பயிருக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்!



அரியலூர், ஜுலை 11

வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் த.ராதாகிருஷ்ணன், அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டாரத்தின் வேளாண்மை உதவி இயக்குனர் ராதிகா உடன் ஆண்டிமடம் வட்டாரத்தில் உள்ள தனியார் உர விற்பனை நிலையத்தை ஆய்வு செய்தார்.

அப்போது வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது, ரசாயன உரங்கள் உற்பத்தி நிலையங்களில் இருந்து நேரடியாக கம்பெனி நிர்வாகிகள் மூலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும், மொத்த விற்பனையாளர்களுக்கும், டீலர் உரிமம் பெற்றவர்கள் நேரடியாக உரங்கள் வாங்குவார்கள். மொத்த விற்பனையாளர்களிடமிருந்து சில்லறை விற்பனையாளர்களுக்கு, வினியோகம் செய்த பிறகு விவசாயிகள் உரங்கள் வாங்க முடியும். விவசாயிகள் தனியார் சில்லறை உர விற்பனை நிலையத்திலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும், உரங்களை வாங்கும் போது, கண்டிப்பாக ஆதார் கார்டு கொண்டு பி ஓ எஸ் இயந்திரம் மூலம் விற்பனை பில் அதில் தங்களின் முகவரி மற்றும் தொலைபேசி என்னுடன் வாங்க வேண்டும். ஆதார் கார்டு இல்லாமல் உரங்கள் வாங்க முடியாது. விவசாயிகள் உரங்கள் மேற்கண்ட உரிமம் பெற்ற உர விற்பனை நிலையங்களில் மட்டுமே உரங்கள் வாங்க வேண்டும். விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன் படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ், ட்ரிபிள் சூப்பர் பாஸ்பேட், டி ஏ பி உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக்கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

டிஏபி உரங்களும் அதிக அளவு விவசாயிகள் வாங்க கூடாது. பயிரின் அளவிற்கு தகுந்தார் போல் அடி உரமாக பயன்படுத்தலாம். யூரியா மற்றும் டிஏபிக்கு பதிலாக யூரியா, நானோ டி ஏ பி விவசாயிகள் பயன்படுத்துவதால், உர செலவு குறைத்து, மண்வளத்தை காத்து, அதிக மகசூல் பெறலாம். வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம்.

சில்லறை உரம் விற்பனையாளர்கள், மொத்த உரம் விற்பனை யாளர்களிடம் உரம் வாங்கும் போது, அனுமதி பெற்ற விற்பனை நிலையத்துக்கு இன்வாய் உடன் வாங்கும்போது இன்வாய்ஸில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள விற்பனை நிலையத்தில் மட்டுமே உரங்களை இருப்பு வைக்க வேண்டும். வேறு ஒரு உரிமம் பெற்ற நிலையத்தில் இருப்பு வைத்திருந்தால் அது தரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி மீறிய செயலாகும். இப்படி இருப்பது அறியப்பட்டால் உரிமம் ரத்து செய்யப்படும். அனைத்து உரம் விற்பனை யாளர்களும் கண்டிப்பாக ஆதார் கார்டு கொண்டு பி ஓ எஸ் பில் போட்டு, விவசாயிகளுக்கு கண்டிப்பாக உரம் வாங்கியதற்கான விற்பனை பில் அவசியம் தர வேண்டும். உரங்கள் விற்பனை செய்யும் போது விற்பனை பில் முகவரி மற்றும் தொலைபேசி நம்பர் இல்லாமல் விற்பனை செய்யப்படுவது, அனுமதி பெறாத இடத்தில் உரம் இருப்பு வைப்பது, விற்பனை விலைப் பலகை பராமரிக்காமல் இருப்பது அறிந்தால், உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும். சில்லரை உரம் விற்பனையாளர்கள் விற்பனை நிலையத்தில் இருப்பு பதிவேடு இருப்பு, பி ஓ எஸ் இயந்திரத்தின் இருப்பு, உண்மை இருப்பு உரங்கள் எப்போதும் சரியாக வைத்திருக்க வேண்டும்.

விற்பனை பில் கண்டிப்பாக விவசாய முகவரி இல்லாமல் விற்பனை செய்யக்கூடாது. உரம் விற்பனை நிலையத்தில் உரக் கட்டுப்பாட்டு சட்டத்தின் படி நடக்கவில்லை என்றால், ஆய்வின் போது உரிய நடவடிக்கை எடுத்து உரம் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்படும் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தமிழகத்தில் ஜூலை 15 வரை வெப்பநிலை உயர வாய்ப்பு!

சென்னை, ஜூலை 11

தமிழகத்தில் 15-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்பு உள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழகக் கடலோரப் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இன்று (ஜூலை 12) மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

13 முதல் 16-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 17-ம் தேதி தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் 15-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒரு சில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 80 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டியும் இருக்கக்கூடும்.



# கோவை வேளாண் கண்காட்சியில் அசத்திய தொழில்நுட்ப கருவிகள்!




கோயம்புத்தூர், ஜூலை 11

கோயம்புத்தூர் கொடிசியா வளாகத்தில் வேளாண் கண்காட்சி (அக்ரி இன்டெக்ஸ்) நடந்து வருகிறது. வரும் 13-ம் தேதி வரை நடைபெற உள்ள இந்த கண்காட்சியில் விவசாயிகளுக்கு மட்டுமின்றி, பார்வையாளர்களுக்கும் வியப்பை தரும் வகையில் பல்வேறு அரங்குகள், நவீன கருவிகள் இடம் பெற்றுள்ளன.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் மட்டுமின்றி பஞ்சாப், லூதியானா என பலரும் ட்ரோன்கள் முதல் ஏ.ஐ. தொழில்நுட்ப கருவிகள் வரை கொண்டு வந்து வைத்துள்ளனர்.

பயிர்களின் வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் தேவையான பல ரக குருணை உரங்களில் ஆரம்பித்து நீர் மேலாண்மையை வெளிப்படுத்தும் சொட்டுநீர் பாசனம், சோலார் தகடுகள், அதிகம் மற்றும் குறைந்த நீர் வெளியேற்றும் திறன் கொண்ட பம்பு செட்டுகள், நாட்டு விதைகள், நாட்டு காய்கறிகள், பழக் கன்றுகள், மரக்கன்றுகள், தேனீ வளர்ப்புக்கு தேவையான தேனீ பெட்டிகள் என அனைத்து விதமான மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இருந்து வந்துள்ள நிறுவனங்கள் விவசாயிகளுக்கு தேவையான தொழில் நுட்பங்களை காட்சிப்படுத்தி உள்ளனர்.

அரங்கில் பல விவசாயிகள் தங்களுக்கு தேவையான அதிநவீன இயந்திரங்கள் முதல் பல்வேறு தொழில்நுட்ப கருவிகளை வாங்கிச் செல்வதை பார்க்க முடிந்தது என விவசாயிகள் தெரிவித்தனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தாவர வள ஆய்வில் GIS மற்றும் GPS தொழில்நுட்பங்களின் பங்கு

தாவர மரபியல் வளங்கள் (Plant Genetic Resources) உணவுப் பாதுகாப்பு, உயிரினப் பன்மை பாதுகாப்பு மற்றும் பயிர் மேம்பாட்டின் அடிப்படையாக விளங்குகின்றன. இவ்வளங்களை கண்டறிந்து சேகரித்து பாதுகாப்பதற்கான செயல்முறையே தாவர வள ஆய்வு (Plant Exploration) எனப்படுகிறது. கடந்த காலங்களில் தாவர வள சேகரிப்பு மற்றும் ஆய்வுகள் காகித வரைபடங்கள், உள்ளூர் தகவல்கள் மற்றும் கள ஆய்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. இதனால் சேகரிப்பு இடங்களின் துல்லியமான தகவல்களைப் பதிவு செய்வதில் சிரமங்கள் ஏற்பட்டன.

இந்நிலையில், புவியியல் தகவல் அமைப்பு (Geographic Information System - GIS) மற்றும் உலகளாவிய இடங்காட்டி அமைப்பு (Global Positioning System - GPS) ஆகிய தொழில்நுட்பங்கள் தாவர வள ஆய்வில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இவை தாவர இனங்களின் பரவல், பன்மை, சேகரிப்பு இடங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை துல்லியமாக நிர்வகிக்க உதவுகின்றன.

### GPS என்றால் என்ன?

GPS என்பது செயற்கைக்கோள் அடிப்படையிலான வழிகாட்டி அமைப்பாகும். இது பூமியின் எந்த இடத்திலும் உள்ள பொருளின் துல்லியமான இருப்பிடத்தை (Latitude, Longitude, Altitude) கண்டறிய உதவுகிறது.

### தாவர வள ஆய்வில் GPS–ன் பயன்பாடுகள்

- தாவர மாதிரிகள் சேகரிக்கப்பட்ட இடங்களின் துல்லியமான இருப்பிடத்தை பதிவு செய்தல்.
- எதிர்காலத்தில் அதே இடத்திற்கு மீண்டும் சென்று ஆய்வு செய்ய உதவுதல்.
- அரிய மற்றும் அழிந்து வரும் தாவர இனங்களின் இருப்பிடங்களை வரைபடமிடுதல்.
- மரபியல் வளங்களின் பாஸ்போர்ட் தரவுகளை (Passport Data) பராமரித்தல்.

**உதாரணம்**

நெல், கம்பு, சோளம் மற்றும் பயறு வகைகளின் பாரம்பரிய ரகங்களை சேகரிக்கும் போது GPS மூலம் இடத் தகவல்கள் பதிவு செய்யப்படுகின்றன. இதனால் அந்த ரகங்களின் பரவல் பகுதியை துல்லியமாக அறிய முடிகிறது.

**GIS என்றால் என்ன?**

GIS என்பது புவியியல் தகவல்களை சேகரித்து, சேமித்து, பகுப்பாய்வு செய்து, வரைபடமாக காட்சிப்படுத்தும் கணினி அடிப்படையிலான அமைப்பாகும்.

**GIS பல்வேறு தரவுகளை ஒருங்கிணைக்கிறது**

- தாவர இன விநியோகம்
- மழைப்பொழிவு
- மண் வகைகள்
- வெப்பநிலை
- உயரம்
- நில பயன்பாடு

இத்தரவுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் தாவரங்கள் மற்றும் அவற்றின் சூழலுக்கு இடையிலான தொடர்புகளை ஆய்வு செய்ய முடிகிறது.

**தாவர வள ஆய்வில் GIS–ன் பங்கு**

**1. தாவர இனங்களின் பரவலை வரைபடமிடுதல்**

GIS தொழில்நுட்பம் தாவர இனங்கள் எந்த பகுதிகளில் காணப் படுகின்றன என்பதை வரைபடமாகக் காட்டுகிறது.

**நன்மைகள்**

- உயிரினப் பன்மை மிக்க பகுதிகளை கண்டறிதல்.
- தாவர இனங்களின் பரவல் முறையை அறிதல்.
- பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குதல்.

**2. பன்மை மிகுந்த பகுதிகளை கண்டறிதல்**

சில பகுதிகள் மரபியல் பன்மை அதிகமாக உள்ள பகுதி களாகக் கருதப்படுகின்றன. GIS மூலம் இத்தகைய பகுதிகளை கண்டறிய முடிகிறது.

**உதாரணம்**

- மேற்குத் தொடர்ச்சி மலைகள்
- கிழக்கு இமயமலைப் பகுதிகள்
- வடகிழக்கு இந்தியா

இவை உயிரினப் பன்மை அதிகம் காணப்படும் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

**3. ஆய்வுப் பயண திட்டமிடல்**

**GIS மூலம்**

- சாலை வசதிகள்
- நில அமைப்பு
- காலநிலை
- முன்னர் சேகரிக்கப்பட்ட தரவுகள்ஆகியவற்றை ஆய்வு செய்து புதிய தாவர வள சேகரிப்பு பயணங்களை திறமையாக திட்டமிட முடிகிறது.

**4. பொருத்தமான வாழிடங்களை கண்டறிதல்**

GIS தொழில்நுட்பம் ஒரு குறிப்பிட்ட தாவர இனம் வளரக்கூடிய பகுதிகளை முன்னறிவிக்க உதவுகிறது.

**இதற்காக**

- மழை
- வெப்பநிலை
- மண் வகை
- உயரம் போன்ற காரணிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

**GIS மற்றும் GPS இணைந்த பயன்பாடுகள்**

GIS மற்றும் GPS இணைந்து செயல்படும் போது தாவர வள ஆய்வின் செயல்திறன் பல மடங்கு அதிகரிக்கிறது.

**மரபியல் வள சேகரிப்பு**

GPS மூலம் சேகரிப்பு இடங்கள் பதிவு செய்யப்படுகின்றன. பின்னர் அவை GIS தரவுத்தளத்தில் இணைக்கப்பட்டு வரை படமாக்கப்படுகின்றன.

**உயிரினப் பன்மை மதிப்பீடு**

GIS மற்றும் GPS உதவியுடன்

● உயிரினப் பன்மை மிக்க பகுதிகள்

● அரிய இனங்கள்

● பாதுகாப்பு தேவைப்படும் பகுதிகள் அடையாளம் காணப்படுகின்றன.

**இடைவெளி பகுப்பாய்வு (Gap Analysis)**

சில பகுதிகளில் மரபியல் வள சேகரிப்பு குறைவாக இருக்கலாம். GIS மூலம் அவ்விடைவெளிகள் கண்டறியப்பட்டு எதிர்கால ஆய்வுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

**காலநிலை மாற்ற ஆய்வுகளில் பங்கு**

காலநிலை மாற்றம் தாவர இனங்களின் பரவலை பாதிக்கிறது. GIS தொழில்நுட்பம் எதிர்காலத்தில் எந்த பகுதிகள் தாவர வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்கும் என்பதை கணிக்க உதவுகிறது.

இதன் மூலம்

● வறட்சி தாங்கும் இனங்கள்

● வெப்பத்தைத் தாங்கும் இனங்கள்

● உப்புத்தன்மையைத் தாங்கும் இனங்கள்

அடையாளம் காணப்பட்டு பயிர் மேம்பாட்டுத் திட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

**பயிர் மேம்பாட்டில் GIS மற்றும் GPS**

புதிய ரகங்களை உருவாக்க தாவர இனப்பெருக்க நிபுணர்களுக்கு பல்வேறு மரபியல் வளங்கள் தேவைப்படுகின்றன.

**GIS மற்றும் GPS மூலம்**

● நோய் எதிர்ப்பு திறன் கொண்ட இனங்கள்

● வறட்சி தாங்கும் இனங்கள்

● அதிக மகசூல் தரும் இனங்கள்

● காலநிலை மாற்றத்தைத் தாங்கும் மரபியல் வளங்கள் கண்டறியப்பட்டு பயிர் மேம்பாட்டில் பயன்படுத்தப்படுகின்றன.

**முக்கிய சாதனைகள்**

● நெல், கோதுமை, சோளம், கம்பு மற்றும் பயறு வகைகளின் காட்டு உறவினர்கள் வரைபடமிடப்பட்டுள்ளனர்.

● மரபியல் வள தரவுத்தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

● உயிரினப் பன்மை மையங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

● பாதுகாப்பு மற்றும் பயன்பாட்டுத் திட்டங்கள் மேம்படுத்தப் பட்டுள்ளன.




**நன்மைகள்**

● துல்லியமான இருப்பிட பதிவு.

● ஆய்வு செலவைக் குறைத்தல்.

● தரவுகளின் சிறந்த மேலாண்மை.

● உயிரினப் பன்மை பாதுகாப்பு.

● பயிர் மேம்பாட்டிற்கு ஆதரவு.

● நீண்டகால கண்காணிப்பு வசதி.

**முடிவுரை :** GIS மற்றும் 5 தொழில்நுட்பங்கள் தாவர வள ஆய்வில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. GPS சேகரிப்பு இடங்களின் துல்லியமான தகவல்களை வழங்குகிறது. GIS அவற்றை பகுப்பாய்வு செய்து தாவர இனங்களின் பரவல், பன்மை மற்றும் பாதுகாப்புத் திட்டங்களை வடிவமைக்க உதவுகிறது. இத்தொழில்நுட்பங்கள் தாவர மரபியல் வளங்களை பாதுகாப்பதற்கும், புதிய பயிர் ரகங்களை உருவாக்குவதற்கும், எதிர்கால உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் முக்கிய பங்காற்றுகின்றன.

தகவல் : ***வெங்கடேஷ் ம, உதவிப் பேராசிரியர் (தாவர இனப் பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா. ரா மற்றும் பாமா.ம (இளங்கலை வேளாண் மாணவி), நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.***

# மாம்பழ விவசாயிகளுக்கு மானியம் மத்திய மாநில அரசுகள் முடிவு என்ன?

மங்கிற காலத்துல மாங்கா, பொங்கிற காலத்துலே புளியங்கா‘ என்ற பழமொழிக்கேற்ப இந்த வருடம் மாங்காய் விளைச்சல் அதிகமாக இருப்பதால் விலை அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் அதிகமான விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்தினர்.



மாம்பழம் பறிப்பு கூலிக்கேற்ப விலை இல்லாத நிலை தான். எனவே இதனை உணர்ந்த மத்திய, மாநில அரசுகள் மாம்பழ விவசாயிகளுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் கிலோவிற்கு 4 ரூபாய் மானியம் வழங்கிட முன்வந்துள்ளன.

**இது எந்த எந்த மாவட்டத்திற்கு பொருந்தும்?**

மாம்பழம் அதிகபட்சமாக விளைச்சல் தரக்கூடிய மாவட்டங் களான தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, திருவள்ளூர் மாவட்டங்களாகும்.

**மாம்பழத்தில் மதிப்புக்கூட்டப்பட்ட பொருள் தயாரிக்க முடியுமா?**



தயாரிக்க முடியும். மாம்பழ பழக்கூழ் (MANGO PULP INDUSTRY'S) தயாரிக்கும் ஆலைகள் பல இருந்தும் அதில் மாம்பழ சாறு அதிகளவில் விற்பனையாகாமல் தேக்கமடைந்து உள்ளன. இதனால் அவைகளால் மாம்பழங் களை கொள் முதல் செய்ய முடியாத நிலையில் இருந்தும் செயல் படாத நிலையில் உள்ளது. இதனால் நடப்பாண்டில் மாம்பழ விவசாயி களுக்குப் கோடி ரூபாய் நஷ்டத்தில் உள்ளது.

**மத்திய மாநில அரசுகள் என்ன முடிவு?**

மாம்பழ விவசாயிகளுக்கு ஆதரவாக மத்திய வேளாண் அமைச்சர் சிவராஜ் சிங் சவுக்கான் மற்றும் தமிழக வேளாண் துறை அமைச்சர் வினோத் மற்றும் அதிகாரிகள் கூடி கீழ்க்கண்ட முடிவை எடுத்தாக தகவல்.

மத்திய மாநில அரசுகள் மாம்பழ கொள்முதல் விவசாயி களுக்கு தலா இரண்டு ரூபாய் வீதம் 4 ரூபாய்/கிலோவுக்கு மானியமாக வழங்க முன்வந்துள்ளதாக முடிவு எடுக்கப்பட்டு, 96,879 டன் தோத்தாபுரி மாம்பழங்களை கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

**மானியம் யாருக்கு வழங்கப்படும்?**

மாம்பழ கூழ் தயாரிப்பாளர்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும், நேரடியாக மாம்பழங்களை வழங்கும் விவசாயிகள் மட்டுமே இந்த மானியத்தை பெற தகுதியுடையவர்கள்.

இந்த மானியம் தோட்டக்கலைத்துறை மூலமாக வழங்கப் படுகிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# சேமிப்பு கிடங்கு பூச்சி : சிவப்பு மாவு வண்டு [Red flour beetle] ட்ரைபோலியம் கேஸ்டேனியம்


புழு பூச்சிகள்

இதன் தாய்ப் பூச்சியும் அதன் புழுக்களும் மாவுப் பண்டங்களை உண்டு வாழ்கின்றன. இவை உடைந்த தானியங்கள் மற்றும் அரைத்த மாவுப்பொருட்களை உண்டு சேதம் விளைவிக்கின்றன.

சேதப்படுத்தப்பட்ட பண்டங்களில் ஒருவித துர்நாற்றம் ஏற்படும். ஒரு தாய்ப்பூச்சி 400 முதல் 500 முட்டைகள் வரை தானியங்களின் மேலும் அல்லது தானியத்துக்கு அரகிலும் இடும்.

முட்டைகளிலிருந்து 2 நாட்களில் புழுக்கள் வெளிவரும். இப்புழுக்கள் வெள்ளை நிறத்துடன் லேசான மெலிந்த கோடுகளுடன் இருக்கும். இரண்டு வால் போன்ற முட்கள் உடலின் கடைசிப்பாகத்தில் அமைந்திருக்கும். இவை 13 நாட்களில் கூட்டுப் புழுக்களாகி பின்னர் 4 நாட்களில் கூட்டப்புழுவிலிருந்து தாய்ப்பூச்சிகள் சுமார் 6 மாத காலம் வரை உயிர்வாழும். இவை மழைக் காலங்களில் சுறுசுறுப்பாக காணப்படும்.

தானியத்தின் ஈரத்தன்மை 12 சதத்திற்கு மேற்பட்டால் இப் பூச்சிகள் தானியத்தை முழுமையாக சேதப்படுத்தும். வண்டுகளின் எண்ணிக்கை அல்லது இனப்பெருக்கம் அதிகமானால் இவைகள் தங்கள் இனப்பூச்சிகளையே உண்டு வாழும் குணத்தையே பெற்றுள்ளன.

இதன் புழுக்கள் தாய்ப் பூச்சிகள் இடும் முட்டைகளையும் மற்றும் கூட்டுப்புழுக்களையும் உண்டு வாழும். இவ்வண்டுகள் உடலிலிருந்து ஒருவித திரவத்தை சுரந்து மாவுக்குள் விட்டு விடுவதால் பண்டங் களிலிருந்து துர்நாற்றம் வீசும்.

## தானியங்களை பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான வழிமுறைகள்

- தானியங்களை அறுவடையில் நன்றாக உலர்த்தி ஈரப்பதம் 8 முதல் 10 சதத்திற்கள் இருக்குமாறு செய்து சேமிக்க வேண்டும்

- தானியங்களை சேமிக்கும் குதிர்கள் மற்றும் அறைகளை நன்றாக சுத்தம் செய்து எந்தவித பூச்சிகள் மற்றும் அதன் வாழ்க்கை பருவங்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

- நவீன சேமிப்புக் களஞ்சியங்களை உபயோகித்தல், குறிப்பாக உலோக குதிர்கள் சிறு விவசாயிகளுக்கு தானியங்களை சேமித்து வைத்துக்கொள்ள சிறந்த சாதனமாக விளங்குகிறது.

- தானிய மூட்டைகளை தரையில் வைக்காது கட்டைகள் மற்றும் மூங்கில் பாய்களின் மீது அடுக்க வேண்டும். மூட்டைகள் கவற்றை ஒட்டி இல்லாமல் தனித்தனியாக, அடுக்கடுக்காக, நல்ல இடைவெளி விட்டு காற்றோட்டமாக வைக்க வேண்டும்.

- தானியக்கதிர் அடிக்கும் களங்கள், சேமிப்பு அறைக்கு தள்ளி இருப்பதுடன், எந்தவித தூசும், மாசும் இல்லாமல் இருக்க வேண்டும்.

- தானிய சேமிப்புக்கு பயன்படுத்தப்படும் சாக்குப்பைகள் புதியதாக அல்லது பூச்சியற்றதாக இருக்க வேண்டும். பழைய சாக்குப்பைகளை மாலத்தியான் அல்லது டைகுளோர்வாஸ் 0.1 சதக் கரைசலில் நனைத்து உலர்த்திப் பின் உபயோகிக்கலாம்.

- மூட்டைகளின் மீது மாலத்தியான் 0.1 சதம் கரைசலை மூட்டை நனையாமல். தானியங்கள் மேல் படாமல் அளவாக தெளித்து வரலாம்.

- பூச்சிகள் மூட்டையினுள் காணப்பட்டால் அவற்றை அலுமினியம் பாஸபைடு மாத்திரையிட்டு (டன்னுக்கு 3 மாத்திரை வீதம்) பாலித்தீன் உறைகளால் மூடி 5 நாட்களுக்கு விப் புகை யிட்டு வைப்பதன் மூலம் அழிக்கலாம். பொதுவாக இந்த முறை பொதுமக்கள் வசிக்கும் இடங்களிலிருந்து தள்ளியுள்ள தானியக் கிடங்குகளிலும் அரசு தானியக் கிடங்குகளிலும் பயன்படுத்தப் பட்டு வருகின்றது. கிராமங்களிலும் நகரங்களிலும் விவசாயிகள் பொதுமக்கள் இதைப் பயன்படுத்த சிபாரிசு செய்யப்படுகின்றன.

தகவல் : ***மதுரஞ்சனா.ஜெ, முனிசா.மா, பசுபதி,இ, ஜெய முருகன் செ, கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, மதுரை-625 532.***

# மயிலாடுதுறை மாவட்டத்திற்கு சம்பா / தாளடி பருவத்தில் பயிரிட ஏற்ற புதிய நெல் சாகுபடிக்கு ரகங்களும் அவற்றின் குணாதிசயங்களும்

தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் உணவுப்பயிர்களில் நெல் ஒரு முக்கிய பயிராகும். இம்மாநிலத்தில் சுமார் 18 லட்சம் எக்டர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இது மாநிலத்தில் மொத்த சாகுபடி பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியாகும்.



மொத்த நெல் சாகுபடி பரப்பளவில் 15.7 சதவீதம் குறுவைப் பருவத்திலும், 74.7 சதவிகிதம் சம்பா பருவத்திலும், 9.6 சதவிகிதம், நவரைப் பருவத்திலும் பயிரிடப்படுகிறது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் (தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை) சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி பிரதான விவசாயமாகும். இது வழக்கமாக ஆகஸ்ட் – செப்டம்பர் மாதங்களில் தொடங்கி ஜனவரி – பிப்ரவரி மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. இப்பருவங்களில் சுமார் 12 முதல் 13.5 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் 1,07,435 எக்டரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் 38,441 எக்டர் குறுவைப் பருவத்திலும் 68,988 எக்டர் சம்பா / தாளடி பருவத்திலும் 100 எக்டர் கோடை பருவத்திலும் சாகுபடி செய்யப்படுகிறது.

**சம்பா பருவம்**

நீண்ட கால (130-150 நாட்கள்) பயிராகும். மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டு, ஆகஸ்ட் முதல் வாரத்தில் நாற்றங்கால் அமைக்கப்பட்டு பின் நடவு செய்யப்படுகிறது.

**தாளடி பருவம்**

குறுவை நெல் அறுவடை செய்யப்பட்ட நிலங்களிலோ அல்லது குறுகிய கால நெற்பயிர்கள் அறுவடைக்குப் பின்னரோ (அக்டோபர் – நவம்பர் மாதங்களில்) தாளடி சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.

சம்பா / தாளடி பருவத்தில் நீண்ட கால (145 முதல் 160 நாட்கள்) மற்றும் மத்திய கால (120 முதல் 145 நாட்கள்) வயதுடைய இரகங்கள், பயிரிடும் சூழல் மற்றும் பாசன வசதிக்கு ஏற்ப தேர்வு செய்யப்பட்டுப் பயிரிடப்படுகிறது. பிரபல இரகங்களான சி.ஆர் 1009, சி.ஆர் 1009 சப் ஒன். ஆடுதுறை 51 போன்ற நீண்ட கால இரகங்களும், ஆடுதுறை 38, ஆடுதுறை 39, ஆடுதுறை 46, ஆடுதுறை 54. கோ 43, கோ 50, கோ 52. மேம்படுத்தப்பட்ட வெள்ளைப் பொன்னி, பிபீடி 5204, சுவர்ணா சப் ஒன், எம்டியு 7029 போன்ற இரகங்களும், ஆர்என்ஆர் 15048, மத்திய கால இரகங்களும், என்எல்ஆர் 34449, அக்சயா, அம்மன், டிகேஎம் 13 போன்ற வயதுடைய குறைந்த மத்திய கால இரகங்களும் பெருமளவில் பயிரிடப்படுகிறது.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவினானே' என்ற கால கூற்றின்படி வேளாண் பெருமக்கள் புதிதாக வெளியிடப் பட்டுள்ள இந்த நெல் இரகங்களைச் சாகுபடி செய்ய முன்வர வேண்டும்.

எனவே, டெல்டா மாவட்ட விவசாயிகள் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் தங்கள் பகுதிக்கு ஏற்ற புதிதாக வெளியிடப் பட்டுள்ள இரகங்களையும், அவற்றின் குணாதிசயங்களையும் சாகுபடி முறைகளையும் தெரிந்து கொண்டு அந்த இரகங்களை பயிரிடலாம்.

இந்த புதிய நெல் இரகங்களை உரிய பருவத்தில் தேர்வு செய்து பயிரிட்டுப் பயனடையுமாறு மயிலாடுதுறை மாவட்ட விதை சான்று மற்றும் உயிர்மச்சான்று துறை உதவி இயக்குனர் சே.விஜயா மற்றும் விதை சான்று அலுவலர் ச.கண்ணன் ஆகியோர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் விரிவாக கூறியுள்ளார்கள்.

**ஆடுதுறை 60 (ADT 60)**

ஆடுதுறை 60 இரகம் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனத்தால் தாளடி மற்றும் லேட் சம்பா பருவத்திற்கு என பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட உயர் விளைச்சல் தரும் மத்தியகால நெல் ரகமாகும். இது பும் 01246 மற்றும் கோ-49 ஆகிய நெல் ரகங்களை இணைத்து உருவாக்கப்பட்ட வீரிய ஒட்டு ரகமாகும். இந்த இரகத்தின் வயது சுமார் 130 முதல் 135 நாட்கள் ஆகும். நடுத்தர சன்ன ரகம், 120 சென்டி மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது, சாயாத தன்மை உடையது. முழுமையாக வெளிவந்த கதிர்கள், அதிக படியான வளர்ந்த நாற்றுக்கள், சீரான பூக்கும் தன்மை, சீரான முதிர்ச்சி, மணிகள் உதிராத தன்மைக் கொண்டது. ஆயிரம் நெல் மணிகளின் எடை 18.5 கிராம். அதிக அரவைத்திறன் (68 சதவிகிதம்) கொண்டது. இந்த இரகம் பூச்சி (புகையான், தண்டுதுளைப்பான், இலைசுருட்டுபுழு மற்றும் பாக்டீரியல் இலை கருகல்நோய், குலைநோய்) நோய்க்கு மிதமான எதிர்ப்பு திறன் கொண்டது. ஒரு எக்டேருக்கு சராசரியாக 6,280 கிலோ (ஏக்கருக்கு சுமார் 25 மூட்டைக்கு மேல்) மகசூல் தரக் கூடியது,இது ஏடிடீ 46 இரகத்தைவிட 13.2 சதவிகிதம் அதிகமாகும்.

## ஆடுதுறை 59 (ADT 59)

2024 ம் ஆண்டில் கார், குறுவை, சொர்ணைவாரி, கோடைக் காலங்களுக்கு ஏற்ற ஆடுதுறை 59 இரகம் ஐ.ஈ. டீ 22075 மற்றும் ஆடுதுறை 48 ஆகியவற்றை இனக்கலப்புச் செய்து இந்த இரகம் உருவாக்கப்பட்டது. உருண்டையான அரிசி அமைப்புக் கொண்ட இது எக்டருக்கு 6100 கிலோ விளைச்சல் தரவல்லது. மேலும், அதிக அரவைத்திறன் (75 சதவிகிதம்) மற்றும் முழு அரிசி காணும் திறனும் (66 சதவிகிதம்) கொண்ட இந்த இரகத்திற்குக் குறைந்த இடுபொருட்களே தேவைப்படு கின்றது. இந்த இரகம் வளம் குறைந்த மண்ணிலும் சாகுபடிச் செய்ய ஏற்றதாகும். முழுமையாக வெளிவந்த இதன் கதிர்கள் வெண்மஞ்சள் நிறமணிகளையும், மிகக் குறைந்த பதர் களையும் கொண்டிருப்பது இதன் சிறப்பியல்புகளாகும். பாக்டீரியா இலையுறைக்கருகல், குலைநோய், துங்ரோவைரஸ் நோய்களுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டதாகவும், குருத்துப்பூச்சி, இலைமடக்குப்புழு. பாக்டீரியா இலைக் கருகல். இலையுறை அழுகல் மற்றும் மஞ்சள்கரிப்பூடடை நோய்களுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் உடையது. இட்டிலி மற்றும் பலகாரங்கள் செய்ய ஏற்ற இந்த இரகத்தில் 19.4 பிபிஎம் துத்தநாகச் சத்து உள்ளது. ஆயிரம் நெல் மணிகளின் எடை 22.4 கிராம்

## ஆடுதுறை 58 (ADT 58)

ஆடுதுறை 58 இரகமானது, ஏடீடி 39 மற்றும் கோனார்க் இரகங்களை பெற்றோராகக் கொண்டு, 2023ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது தாளடி மற்றும் பின் தாளடிப் பருவங் களில் பயிரிடக் கூடிய மத்திய கால (125 — 130 நாட்கள்) இரக மாகும். இது எக்டருக்குச் சராசரியாக 6100 கிலோ விளைச்சல் தரவல்லது. இந்த இரகம் அதிக எண்ணிக்கை யிலான கதிர் களை உடைய தூர்களையும். அடர்த்தியான அடித்தூர் மற்றும் சாயாத உறுதியான தண்டமைப்பு கொண்டதாகவும் காணப் படுகிறது. நடுத்தரச் சன்ன அரிசியை உடைய இந்த இரகத்தின் ஆயிரம் நெல் மணிகளின் எடை 16.5 கிராம் ஆகும். இது நல்ல அரவைத் திறன் (72.65 சதவிகிதம்) மற்றும் முழு அரிசி காணும் திறன் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. குலைநோய், செம் புள்ளி, இலையுறை அழுகல் இலை மடக்குப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் ஆகிய நோய் மற்றும் பூச்சித் தாக்குதலுக்கும் மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. இது ஏடிடீ 39 இரகத்திற்குச் சிறந்த மாற்று இரகமாகப் பயிரிடப்படுகிறது.

## ஆடுதுறை 52

ஆடுதுறை 52 இரகம் சீ.ஆர் 1009 மற்றும்/ஏ.டி. டீ 49 ஆகியவற்றை இனக்கலப்புச் செய்து உருவாக்கப்பட்டது. நடுத்தர உயரம். நடுத்தரத் தூர்க்கட்டும் திறன் மற்றும் சாயாத தன்மை கொண்டது. எக்டருக்கு சராசரி 6002 கிலோ விளைச்சல் தர வல்லது. அனைத்திந்திய ஆய்வுகளின்படி மத்திய மண்டலத்தில் பி.பீ.டி 5204 யைவிட 27.6 சதவிகிதம் அதிக விளைச்சல் தரவல்லது கண்டறியப்பட்டது. இலைச்சுருட்டுப்புழு, குருத்துப் பூச்சி, குலை நோய், குருத்து அழுகல், நெல்நிற மாற்றம் ஆகியவற்றிற்கு நடுத்தரத் தாங்கும் திறன் கொண்டது.மத்திய சன்ன வெள்ளைஅரிசி. 1000 நெல்மணிகளின் எடை 16.9 கிராம் ஆகும். அதிக அரவைத் திறன் (67.7 சதவிகிதம்). முழு அரிசி காணும் திறன் (61.1 சதவிகிதம்) மற்றும் சிறந்த சமையல் பண்புகளைக் கொண்டது.

## ஆடுதுறை 51

ஆடுதுறை 51 இரகம் பிபிடி 5204 / மேம்படுத்தப்பட்ட வெள்ளைப் பொன்னி ஆகியவற்றை இனக்கலப்புச் செய்து-உருவாக்கப்பட்டது. குறைந்த உரச்செலவில் துரிதமாக வளரும் தன்மை உடையது. எக்டருக்கு சராசரி விளைச்சல் 6595 கிலோவும், அதிகபட்ச விளைச்சல் 10035 கிலோவும் (திருவிசை நல்லூர். தஞ்சாவூர் மாவட்டம்) தரவல்லது குலைநோய், இலைச் சுருட்டுப்புழு மற்றும் குருத்துப் பூச்சிக்கு எதிர்ப்புத் திறனும். புகையான், இலையுறை அழுகல் மற்றும் இலையுறைக் கருகல் ஆகியவற்றிற்கு மிதமானஎதிர்ப்புத் திறனும் கொண்டது. மத்திய சன்ன அரிசியாக இருந்த போதிலும். ஆயிரம் நெல்மணிகளின் எடை 23.9 கிராம் ஆகும். இது சி.ஆர்.1009க்கு இணையான தாகும் அரவைத்திறன் மற்றும் முழு அரிசி காணும் திறன் முறையே 70.3 சதவிகிதம் மற்றும் 60.5 சதவிகிதமாகும் சமையல் பண்புகள் மற்றும் உணவின் சுவை சீ.ஆர். 1009க்கு இணையாக உள்ளது. மேலும், சமைத்த அரிசி ஒட்டாமலும், மிருதுவாகவும் இருக்கும். சிற்றுண்டி வகைகள் மற்றும் இனிப்புக் கார வகைகள் செய்யவும் ஏற்றது.

## கோ 59

கோ 59 இரகம் மேம்படுத்தப்பட்ட வெள்ளைப் பொன்னி /அப்போ ஆகியவற்றை இனக்கலப்புச் செய்து உருவாக்கப் பட்டது. எக்டருக்கு சராசரி 5867 கிலோ விளைச்சல் தரவல்லது.

அதிக விளைச்சல் 8676 கிலோ / எக்டர் (பந்த்நகர், உத்ரகாண்ட்) மற்றும் 8200 கிலோ / எக்டர் (தருமபுரி). நடுத்தரக் குட்டை மற்றும் வறட்சியைத் தாங்கும் பண்புகளை உடையது. வெண் முதுகு தத்துப் பூச்சி. இலைச்சுருட்டுப்புழு மற்றும் குலை நோய்க்கு மிதமான எதிர்ப்புதிறன் உடையது. ஆயிரம் நெல் மணிகளின் எடை14.0 கிராம். அதிக அரவைத் திறன் (65-75 சதவிகிதம்) முழு அரிசி காணும் திறன் (60 - 70 சதவிகிதம்) மற்றும் சிறந்த சமையல் பண்புகளைக் கொண்டது.

**கோ 58 (CO 58)**

வறட்சியைத் தாங்கும் தன்மை கொண்ட கோ 58 இரகம் மேம்படுத்தப்பட்ட வெள்ளைப்பொன்னி மற்றும் அப்போ ஆகியவற்றை இனக்கலப்புச் செய்து 2024ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. குறுகியகால இரகமான இது (118 — 124 நாட்கள்) நீண்ட சன்னமான அரிசியைக் கொண்டுள்ளது. பின் சம்பா, தாளடி மற்றும் பிசானம் போன்ற பருவங்களில் நடவு முறையிலோ அல்லது நேரடி விதைப்பு முறையிலோ பயிரிட ஏற்றது. எக்டருக்கு 5858 கிலோ விளைச்சல் தரக்கூடிய இந்த இரகத்தின் 1000 நெல் மணிகளின் எடை19.4 கிராம் ஆகும். இந்த நெல் இரகம் அதிக அரவை திறன் (62 சதவிகிதம்), முழு அரிசி காணும் திறன், வாசனையாகவும், மிருதுவான தாகவும். இடைப்பட்ட அமைலோசுடன். நன்கு நீளும் தன்மை கொண்ட தாகவும் உள்ளதால், பிரியாணி மற்றும் துரித உணவு வகை களுக்கு ஏற்றது. இலையுறைக் கருகளுக்கு எதிர்ப்புத்திறனும், வெள்ளை மற்றும் பச்சைத் தத்துப்பூச்சி, குலைநோய், துங்ரோ வைரஸ் மற்றும் பழுப்புப் புள்ளி நோய்களுக்கு மிதமான எதிர்ப்புத் திறனும் கொண்டது.

**கோ 56 (CO 56)**

சம்பா மற்றும் தாளடிப் பருவங்களுக்கு (130 - 135 நாட்கள்) ஏற்ற கோ 56 என்ற இரகம் 2023ஆம் ஆண்டு இப்பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டது. இது கோ ஆர் 50 மற்றும் சி.பி. 05501 ஆகிய இரகங்களை இனக்கலப்புச் செய்ததன் மூலம் உருவாக்கப்பட்டதாகும். இதன் விளைச்சல் திறன் ஏடீடி 49ஐ விட 10.26 சதவிகிதமும். பிபிடி 5204ஐ விட14.30 சதவிகிதமும் அதிகம் (6372 கிலோ / எக்டர்) ஆகும். தண்டுத் துளைப்பான், ஆனைக்கொம்பன், குலைநோய், பாக்டீரியா இலைக்கருகல், இலையுறை அழுகல், பழுப்புப் புள்ளி நோய். இலையுறைக் கருகல், துங்ரோ மற்றும் நெல் மணிகளின் நிற மாற்றம் ஆகிய

வற்றிற்கு மிதமான எதிர்ப்புத்திறனைக் கொண்டது. வெள்ளை நிற மத்திய சன்னமான அரிசி கொண்ட இந்த இரகம், நல்ல அரவைத் திறனும் (67 சதவிகிதம்). முழு அரிசி காணும் திறனும் (64.10 சதவிகிதம்) கொண்டது. இதன் சாதமானது நீளும் தன்மை கொண்டிருப்பதால் (1.61 சதவிகிதம்) சமைப்பதற்குச் சிறந்ததாகவும், அதிக உபரி ஆகும் தன்மையும் பெற்றுள்ளது.

**கோ 53 (CO 53)**

கோ 53 என்ற இந்த இரகம், 2020ம் ஆண்டு, பி.கே.எம் (ஆர்) 3 மற்றும் நொறுங்கன் இரகங்களை இனக்கலப்புச் செய்து– உருவாக்கப்பட்டது. குறுகிய கால வறட்சியைத் தாங்க கூடிய தாகவும், வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் பயிரிட ஏற்ற இரகமாகும். கோ 53 இரகம் குட்டைப் பருமனுடன். வெண்மை நிற அரிசியைக் கொண்டுள்ளது. அதிக முழு அரிசி காணும் திறன் கொண்ட இந் தஇரகத்தின் (69.6 சதவிகிதம்) ஆயிரம் மணிகளின் எடை 24 கிராம் ஆகும். மேலும், இதன் முழு அரிசி காணும் திறன்59.6 சதவிகிதம் ஆகும். மானாவாரியில் எக்டருக்கு 3718 கிலோ விளைச்சல் தரவல்ல இந்த இரகம், இலையுறை அழுகல், இலைப்புள்ளி, துங்ரோ வைரஸ் மற்றும் குலை நோய் போன்ற நோய்களுக்கு மிதமானஎ திர்ப்புத்திறன் உடையது. அண்ணா (ஆர்) 4 இரகத்தைக் காட்டிலும் கோ 53 இரகத்தின் வேர்கள் நீளமாகவும், அடர்த்தியாகவும், வறட்சியைத் தாங்கும் தன்மையையும் கொண்டுள்ளதால் தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிப்புக்குள்ளாகும் மாவட்டங்களில் பயிரிட ஏற்றதாக உள்ளது.

**கோ 43 (சப் 1) (CO 43 Sub 1)**

அதிக நீர்த்தேக்கத்தைத் தாங்கி வளரும் கோ 43 (சப் 1) ரக மானது. கோ 43 மற்றும் எப்ஆர் 13ஏ ஆகிய ரகங்களைக் கலப்புச் செய்து, மரபணுக் குறிப்பான்கள் உதவியுடன் தேர்வு செய்யப்பட்டு 2017ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதன் வயது 135-140 நாட்களாகும். இதன் சராசரி விளைச்சல் எக்டருக்கு 6000 கிலோவாகும். இந்த இரகம் குலைநோய், பாக்டீரியா இலைக்கருகல், துங்ரோ வைரஸ் பழுப்பு இலைப்புள்ளி மற்றும் இலையுறைக் கருகல் ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் உடையது. மத்திய பயிர் இரகங்கள் வெளியீட்டு குழுவின் மூலம், அகில இந்திய வேளாண்மைப் பல்கலை தமிழ்நாடு கழகத்தால் இந்த ரகம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ரகம் அதிக நீர்த் தேங்கும் இடங்கள் மற்றும் உவர் நிலங்களிலும் பயிரிட ஏற்றதாகும்.

## திருச்சி 5 (TRY 5)

உவர் நிலங்களில் பயிரிட ஏற்றக் குறுகிய கால அளவு (115 - 120 நாட்கள்) கொண்ட இந்த நெல் இரகம், 2022ம் ஆண்டு திருச்சி 2 இரகத்தை மரபு உருமாற்றம் செய்து உருவாக்கப்பட்டதாகும். இந்த இரகம், எக்டருக்குச் சுமார் 5100 கிலோ விளைச்சல் தரவல்லது. சன்னமான அரிசியையுடைய இந்த சமையலுக்கு ஏற்ற மத்திய இரகம், அதிக அரவைத்திறன் மற்றும் முழு அரிசி காணும் திறனையும் கொண்டுள்ளது.

## கேகேஎம் 1 (KKM1)

2024ம் ஆண்டு வெளியிடப்பட்ட இரகம். கதிரியக்கம் மூலம் மரபணுமாற்றம் அடைந்த வெள்ளைப் பொன்னியிலிருந்து-உருவாக்கப்பட்டதாகும். இது முன் குறுவை. முன்கார், பிந்திய பிசானம் ஆகிய பருவங்களுக்கு ஏற்றது. 120 நாட்கள் வயதுடைய இந்த இரகம் அதிக விளைச்சல் (6102 கிலோ / எக்டர்) தரவல்லது. நடுத்தர உயரம். நிமிர்ந்த செடி, சாயாத தன்மை, நெருக்கமானசெடி அமைப்பு மற்றும் முற்றிலும் வெளிவந்த நெருக்கமான கதிர்கள் ஆகியவை இதன் சிறப்பியல்புகளாகும். இந்த இரகத்தின் ஆயிரம் நெல்மணிகளின் எடை 15.6 கிராம் ஆகும். மத்திய சன்னமான வெள்ளை அரிசியைக் கொண்ட இந்த இரகம், அதிக அரவைத் திறன். முழு அரிசி காணும் திறன் மற்றும் நடுத்தர அமைலோஸ் அளவினைக் கொண்டுள்ளது. இது சமைத்தப் பின் நல்ல வெண்மை நிறத்துடன் ஒட்டமாலும், சீராகவும் உள்ளது. சாதம் மற்றும் மாவுப் பண்புகள் வெள்ளைப் பொன்னிக்கு இணையாகக் காணப்படுகிறது. தண்டுத்துளைப்பான் மற்றும் இலைமடக்குப் புழுவிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பயிரிட ஏற்ற இந்த இரகம், குலைநோய், இலையுறைக் கருகல் மற்றும் இலையுறை அழுகல் நோய்களுக்கு மிதமான எதிர்ப்புத்திறனைக் கொண்டுள்ளது.

## டிகேஎம் 15 (TKM 15)

2022 ம் ஆண்டு டிகேஎம் 12 மற்றும் ஐஇடி 2160 வறட்சியைத் தாங்கவல்ல இந்த இரகம். இரகங்களை ஒட்டு சேர்த்துஉருவாக்கப் பட்டதாகும். இந்த இரகத்தின் வயது 115 - 120 நாட்கள்ஆகும். தமிழ்நாட்டில் நேரடி நெல் விதைப்புக்கும். வடகிழக்குப் பருவமழைக் காலமான. செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் விதைப்ப தற்கும் ஏற்றது. நடுத்தர உயரம். அதிகத்தூர் கட்டும் திறன். அடர்த்தியான கதிர்கள் மற்றும் சாயாத தன்மை கொண்ட இந்த இரகம் மானாவாரியில் 3995 கிலோ / இந்த பகுதிப்பாசன முறையில் 4217 கிலோ / எக்டர். விளைச்சல் தரவல்லதாகும்.

வெள்ளை நிற அரிசியை அதிக அரவைத்திறன் உடைய இந்த நடுத்தரச் சன்ன 62.9 சதவிகிதம் (68 சதவிகிதம்) ரகம். திறனையும் கொண்டது. முழு அரிசி மற்றும் தண்டுத் துளைப்பான், இலைச் சுருட்டுப்புழு மற்றும் ஆனைக்கொம்பன் ஆகிய பூச்சித் தாக்கு தலையும், குலை நோய். இலையுறைக் கருகல் நோய், இலையுறை அழுகல் நோய் மற்றும் இலைப்புள்ளி நோய் மற்றும் துங்ரோ வைரஸ் ஆகிய நோய்களுக்கு மிதமான எதிர்ப்புத் திறன் உடையது.

**ASD 21 :** 2023ம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஏஎஸ்டி 21 இரகம், ஏஎஸ்டி 16 மற்றும் மஞ்சள் சாரடை ஆகிய இரு ரகங்களை இனக் கலப்புச் செய்ததன் மூலம் உருவாக்கப்பட்டது. முன் குருவை, முன் கார் மற்றும் பிந்திய பிசான பருவங்களில் பயிரிட ஏற்ற இந்த ரகம் 120 நாட்கள் வயதுடையது. எக்டருக்கு 6330 கிலோ விளைச்சல் தரவல்ல இந்த இரகம் நடுத்தர உயரம், நிமிர்ந்த, சாயாத செடி அமைப்பு மற்றும் நெருக்கமான மணிகளைக் கொண்டது. குட்டை யான பருமனும், வெண்மையான அரிசியையும் கொண்ட இந்த இரகத்தின் 1000 மணிகளின் எடை 24.4 கிராம் ஆகும். அதிகமான முழு அரிசி காணும் திறனையும் (59.3 சதவிகிதம்), நடுத்தர அமைலோஸ் (21.5 சதவிகிதம்) மற்றும்4.1 சதவிகிதம் சாதம் காணும் திறனையும் கொண்டுள்ளது. சமைத்த பின் அரிசிகள் ஒட்டாமல் சீராகக் காணப்படும். மேலும், இந்த இரகம் தண்டுத் துளைப்பான். இலை மடக்குப்புழு. குலை நோய் மற்றும் இலையுறை அழுகல் ஆகிய நோய்களுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது.


**'காரைக்கால் 5' (KKAL 5) :** காரைக்கால் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும்ஆராய்ச்சி நிலையத்தால் உருவாக் கப்பட்ட புதிய நெல் ரகம் 'காரைக்கால் 5' (KKAL 5) இந்த நெல் ரகம் ADT 45 / FL478 / CSR 27 என்ற மரபியல் சேர்க்கை (Pedigree / Cross derivative) மூலம் உருவாக்கப்பட்டது. மத்திய பயிர்வகை வெளியீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த நெல் ரகம், சொர்ணவாரி மற்றும் குறுவை பருவங்களுக்கு ஏற்றது உப்புத் தன்மை தாங்கும் திறன்: ஆரம்ப வளர்ச்சி நிலை மற்றும் இனப் பெருக்க நிலையில் ஏற்படும் உப்புத் தன்மையை வெற்றிகரமாகத் தாங்கி வளரக்கூடியது. மத்திய குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ள தால், இந்த ரகம் புதுச்சேரி யூனியன் பிரதேசம் மட்டுமின்றி, தமிழ் நாடு, கேரளா மற்றும் மேற்கு வங்க மாநிலங்களிலும் பயிரிடு வதற்கு ஏற்ற ரகமாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள இந்த நெல் ரகம், டெல்டா மற்றும் கடலோரப்பகுதி விவசாயிகளின் நீண்டகாலத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது சொர்ணவாரி மற்றும் குறுவை ஆகிய இருபருவங்களிலும் பயிரிடுவதற்கு மிகவும் ஏற்றது. இந்த ரகத்தின் மிக முக்கியமான அம்சம், மண்ணில் உள்ள உப்புத்

தன்மையை (Salinity) தாங்கி வளரும் திறன் ஆகும். ஆரம்ப வளர்ச்சி நிலை மற்றும் இனப்பெருக்க நிலை என இரண்டு நிலைகளிலும் உப்புத்தன்மையால் ஏற்படும் பாதிப்புகளை இது திறம்பட எதிர்கொள்கிறது. 115 முதல் 120 நாட்கள் பயிர் காலத்தைக் கொண்ட இந்த ரகம், வெள்ளை நிறமுடைய, நடுத்தர நீள சன்ன ரக அரிசியைக் கொண்டது. இது சந்தையில் நல்ல வரவேற்பைப் பெறும்என எதிர்பார்க்கப்படுகிறது. பாக்டீரியல் இலை கருகல்நோய், இலை குலைநோய், இலை உறை அழுகல் நோய். நெல் துங்குரோ வைரஸ். நோய்களுக்கு எதிராக இந்த ரகம் மிதமான எதிர்ப்புத் திறனைக் கொண்டுள்ளது,

**KKL(R) 4 :** காரைக்காலில் உள்ள பண்டிட் ஜவஹர்லால் நேரு வேளாண் மற்றும் ஆராய்ச்சிக் கழகம் (PAJANCOA & RI) உருவாக்கிய புதிய நெல் ரகம் தான் KKL(R) 4. இந்த ரகம் வெள்ளத்தால் ஏற்படும் பயிர் சேதத்தைக் குறைக்கப் பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ளது. 120 முதல் 125 நாட்கள் வயதுடைய இந்த இரகம் தாளடி பருவத்திற்கு மிகவும் ஏற்றது. வெள்ளம் மற்றும் தேங்கிய தண்ணீரைத் தாங்கி வளரும் திறன் கொண்டது. சாதாரண சூழ்நிலைகளில் ஹெக் டேருக்கு 6 டன்கள் வரையிலும், வெள்ளம் பாதித்த காலங்களில் ஹெக்டேருக்கு 4 டன்கள் வரையிலும் மகசூல் தரக்கூடியது. நடுத்தர தடித்த (Medium bold) அரிசியைக் கொண்ட இந்த இரகத்தின் 1000 தானிய எடை 22.3 கிராம் ஆகும். இது வெள்ளப் பெருக்கு மற்றும் நீர் தேங்கும் நிலங்களை (Submergence stress) தாங்கி வளரக் கூடிய ஒரு கால நிலை மாற்றத்தை எதிர்க்கும் (Climate-resilient) நெல் ரகமாகும். பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு : இலைக்கருகல் மற்றும் தானியநிற மாற்றம் போன்ற நோய்களுக்கு எதிராக மித மான எதிர்ப்புச்சக்தியைக் கொண்டுள்ளது. அரிசியின் தரம் : அரிசி சீரான ஸ்டார்ச் (starch) அளவைக் கொண்டுள்ளதால், சமைப்ப தற்கும் சிற்றுண்டிகள் தயாரிப்பதற்கும் மிகவும் ஏற்றது.

விவசாயிகள் தங்கள் வயல் சூழ்நிலைக்கும், விருப்பத்திற்கும், ஏற்ற உயர் விளைச்சல் தரக்கூடிய புதிய இரகங்களைத் தேர்வு செய்து அவாரு தேர்வு செய்யப்பட்ட ரகத்தின் தரமான சான்று விதைகளை வேளாண் விரிவாக்க மையங்களின் மூலமாகவோ அல்லது தனியார் கடைகளின் வாயிலாகவோ பெற்று விதையின் தரத்தினை திருவாரூர் மாவட்ட விதைப்பரிசோதனை நிலையத்தில் உறுதி செய்து, பரிந்துரைக்கப்படும் தொழில்நுட்பங்களைக் கடைபிடித்து அதிக விளைச்சலும், அதிக இலாபமும் பெற்று மயிலாடுதுறை மாவட்ட உணவு உற்பத்தியை பெருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இதனை சே.விஜயா, விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர், 63828 46646 மற்றும் ச.கண்ணன், விதை சான்று அலுவலர் மயிலாடுதுறை தெரிவித்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333